# 100 நாள் வேலைத்திட்டத்தை அழிக்கத் துடிக்கும் நாசகார ஒன்றிய பா.ஜ.க. அரசு –

# ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்து கூட்டணிக் கட்சியினர் கடலெனத் திரண்ட காட்சி!



கீழ் கோத்தகிரி ஒன்றிய கழகச் செயலாளர் பீமன் தலைமையில் சோலூர் மட்டம் ஊராட்சி அலுவலகம் முன் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் கருப்பையா, எஸ்.ஆர். ராஜேந்திரன், இ.ராம்குமார், தொழிலாளர் அணி மாவட்ட தலைவர் முருகன், சுரேஷ், வின்சென்ட்,ரவி, ருக்மணி, நாகராஜ், ஜோகி, எஸ். எஸ்.குமார், விசாலாட்சி, IT. விங், நெடுகுளா மோகன், வெள்ளதுரை, ஜெய் விக்னேஷ், சிவனேஷ், தினேஷ், சந்துரு, நாகராஜ் கடசோலை, காவேரி, புதுகாலனி ஆதித்தியன், ராஜேந்திரன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டையில் அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய அரசைக் கண்டித்து மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக மாவட்ட அவைத்தலைவர் சுப்பிரமணியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்வில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ராம.சுப்புராம், ஒன்றிய செயலாளர்கள் அழகு சிதம்பரம், இரா.கணேசன், முன்னாள் ஒன்றியச் செயலாளர் ஆர்.எம்.கருப்பையா, இரா.மேகநாதன், சிவகுமார், அருண் சேகர், சரவணன், கலை, சீமானூர் கணேசன், சுப.துரைராஜா, ஆறு.சுரேஷ், சிக்கந்தர், சாமி சுரேஷ், கரிகாலன், நீலமேகம், முத்துக்குமார் உள்ளிட்ட திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியா ப்பட்டணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் ஒன்றிய செயலாளர்கள் ஏ.விஜயகுமார், க.ரத்தினவேல், ஏ.ஏ.ஆறுமுகம், கோபால், சங்கர், பாபு, பாக்கியலட்சுமி மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் , பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே உள்ள தலைமை தபால் நிலையம் எதிரில் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் மகாத்மா காந்தி பெயரை நீக்கியும், திட்டத்தை ஒழிக்க சட்டம் கொண்டு வந்துள்ள ஒன்றிய பாஜக மோடி அரசை கண்டித்து மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ் ராஜ்குமார், நாகை மாலி, கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த மாவட்ட செயலாளர் பி.சீனிவாசன், சி. கொளஞ்சி, ஏ.சீனிவாசன். சிவ. மோகன்குமார், கே.மணி, கணவாசல் குணசேகரன் கிசத்தியசீலன், ஜெக.வீரபாண்டியன், முவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், ப.முருகமணி, குண்டாமணி (எ) என்.செல்வராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், சங்கரநாராயணன், அ.காந்தி,மற்றும் பலர் உள்ளனர்



அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. தலைமையில் கண்டன முழக்கத்தை கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் எழுப்பினர்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் அரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு 100 நாள் வேலை திட்டத்தில் அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்கி அத்திட்டத்தை முற்றிலுமாக ஒழிக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசையும்,அதற்கு ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து தருமபுரி திமுக கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி. தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் நகர செயலாளர் முல்லைரவி,காங்கிரஸ் வைரவன்,வி.சி.க சாக்கன் ஷர்மா,உள்ளிட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் திமுக ஒன்றிய செயலாளர்கள், தொண்டர்கள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.




100 நாள் வேலை திட்டத்தை சீர்குலைக்கும் பா.ஜ.க. அரசியலைக் கண்டித்து நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் நாமக்கல் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, நகர கழக செயலாளர்கள் ராணத் பூபதி, சிவக்குமார், ஒன்றிய செயலாளர் பழனிவேல் மற்றும் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட 3000 திற்கும் மேற்பட்டோர் பலர் கலந்து கொண்டனர்.




நாகை மாவட்டம் நாகையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் மகாத்மா காந்தி பெயரை நீக்கியும், திட்டத்தை ஒழிக்க சட்டம் கொண்டு வந்துள்ள ஒன்றிய பாஜக மோடி அரசை கண்டித்து நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ், நாகூர்காங்கிரஸ் கட்சி மூத்த உறுப்பினர் ராமலிங்கம், மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் அனஸ், மதிமுக நகர செயலாளர் சோழராஜேந்திரன் கழகத்தைச் சேர்ந்த ஒன்றிய செயலாளர்கள் நாகை தெற்கு க.இராஜேந்திரன், நாகை வடக்கு சிக்கல் என் ஆனந்த். நகர செயலாளர்கள் நாகை இரா. மாரிமுத்து, நாகூர் எம்.ஆர். செந்தில்குமார் மற்றும் கூட்டணி கட்சியினர். கழகத்தினர் உள்ளனர்.